RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2018

OPEN ACCESS

# பாரதியார் கவிதைகளில் குரு சீடன் உறவு

**சி. சதானந்தன்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600106, தமிழ்நாடு, இந்தியா.

# Guru-Disciple Relationship in Bharathiyar's Poems

**C. Sadhanandan** [a, *]

[a] Department of Tamil, Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College (Autonomous), Coimbatore, Tamil Nadu, India.

* Corresponding Author:
thensadha@gmail.com

Received: 25-06-2022
Revised: 11-09-2022
Accepted: 28-09-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

In the world, man can live only with the help of knowledge, whether it is a worldly life or a philosophical life. The guru's guidance is very essential for acquiring that knowledge and knowledge. If there is no guru, there is no disciple. If one does not have a disciple, he cannot be a guru at all. Therefore, the guru-disciple relationship or the teacher-student relationship is interdependent. Bharathiyar has sung for the liberation of the soul as much as he sang for the freedom of the country. But it is his country's liberation songs that are highlighted and admired by Many. Therefore, in order to highlight the songs sung by him for the liberation of the soul, this article is based on the contents of the two sub-headings "Gurudarsanam" and "Upadhesam", which are in the main heading "Bharathi Arupathiyaru". In these two titles, "Gurudarsanam" and "Upadhesam", Bharathiar sings about his meeting with his guru and the teaching he received from him. The purpose of this article is to examine the subtleties, philosophical issues, and the relationship between the guru and the disciple the guru and the disciple named Bharati.

**Keywords:** Gurudarshan, Upadesha, Kullachami, Desikan, Thiruvadi, Kollai

## முன்னுரை

உலகில் மனிதன் சிறந்து விளங்குவதற்கும் வளமாகவும் நலமாகவும் வாழ்வதற்கும் அறிவு முக்கியமாகும். மனிதரிடம் அறிவு சிறப்பாக இருந்தால்தான் உலகியல் வாழ்க்கையிலோ மெய்யியல் வாழ்க்கையிலோ சிறப்பாக வாழமுடியும். "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு" எனும் தெய்வப்புலவரின் வைரவரிகள் அருளும் பொருளும் மிக இன்றியமையாதவை என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது (Varatharasan, 2014). இவ்விரண்டையும் பெறுவதற்கு அறிவே அவசியமாகிறது. "அறிவே தெய்வம்" என்று பாரதியார் கூறுகிறார். அவ்வறிவு மனிதனிடம் வேர்விட்டுக் கிளர்ந்தெழுவதற்குக் குரு அடிப்படைக் காரணமாகின்றார். குரு இல்லையெனில் சீடன் இல்லை. சீடனுக்கான அறிவு வளர்ச்சியும் இல்லை. சீடன் அல்லது மாணவன் என்கிற நிலையிலிருந்து ஒவ்வொருவரும் கல்வி கற்று அறிவு பெறவில்லையெனில் இவ்வுலகில் நிலைதடுமாறிப் பொருளாதாரச் சிக்கலில் அகப்பட்டு அல்லலுற்று ஒருவரையொருவர் அடித்துண்ணும் விலங்கின நிலைக்குத் தள்ளப்படுவர். எனவே எம்மனிதனுடைய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் குருவே முதன்மைக் காரணமாக அமைகின்றார். குருவிடமிருந்து கல்வி கற்றல் என்பது இரண்டு வகையில் நடக்கிறது. ஒன்று உலகியல் கல்வி. மற்றொன்று மெய்யியல் கல்வி. அஃதாவது உலகியல் சார்ந்த பாடங்களைப் படித்து அதன்மூலம் அறிவு பெற்று அவ்வறிவைக் கொண்டு ஏதேனும் ஒரு தொழில்

செய்து பொருளீட்டி உலகியல் வாழ்க்கையில் வளமாக வாழ்வது உலகியல் கல்வியாகும். உலகியல் வாழ்க்கையை வாழ்ந்து முடித்துப் பின்னரோ அல்லது இயற்கையில் கிடைத்த அறிவுத் தெளிவாலோ உலகியல் வாழ்க்கை வேண்டாமென்று உலகியலைத் துறந்து மெய்யியல் கல்வி கற்று அறிவோடு ஞானத்தையும் பெற்று முக்தியை அடைவது மெய்யியல் கல்வியாகும்.

மகாகவி பாரதியார் உலகியல் கல்வியைக் காட்டிலும் மிக அதிகமாக மெய்யியல் கல்வியைக் கற்றவர். பல ஞான குருமார்களைத் தேடித்தேடி மெய்யியலைக் கற்றவர். மனிதன் முக்திக்குச் செல்வதற்கு அவன் சுதந்திரனாக இருக்க வேண்டும். எவருக்கும் அடிமையாக இருக்கக்கூடாது. அடிமைகள் சுதந்திரமாக சிந்திக்க முடியாது என்பதற்காகவே நாம் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலைபெற வேண்டுமென்று எண்ணினார். எனவேதான் விடுதலைக்காகப் பாடுபட்டார். மக்களிடமும் விடுதலை உணர்வை, விடுதலை வேட்கையை ஏற்படுத்துவதற்குப் பல பாடல்களைப் பாடினார். பாரதியார் நாட்டு விடுதலை குறித்து எந்தளவிற்குப் பாடியுள்ளாரோ அந்த அளவிற்கு மெய்யியல் குறித்தும் பாடியுள்ளார். பாரதி தன்னை ஒரு சித்தன் என்று அவரே பிரகடனப்படுத்திக் கொள்வதையும் அவருடைய பாடல்களில் காணலாம்.

“எனக்குமுன்னே சித்தர்பல ரிருந்தா ரப்பா

யானும்வந்தே னொருசித்த னிந்த நாட்டில்”

மகாகவி பாரதியார் தம்முடைய கவிதைகளில், அவர் எவ்வாறு உலகியல் கல்வியையும் மெய்யியல் கல்வியையும் குருவின் துணைகொண்டு கற்றார் என்பதைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார். “பாரதி அறுபத்தாறு” எனும் முதன்மைத் தலைப்பில் “குருதரிசனம்”. “உபதேசம்” எனும் இரண்டு துணைத்தலைப்பினுள் தன்னுடைய குருவைச் சந்தித்தது குறித்தும் அவரிடம் பெற்ற உபதேசம் குறித்தும் பாடியுள்ளார். இவற்றிலுள்ள நுட்பங்களையும் மெய்யியல் சார்ந்த விடயங்களையும் குருவிற்கும் பாரதி என்கிற சீடனுக்கும் இடையே இருந்த குரு, சீடன் உறவுநிலையையும் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும் (Gurusamy, 2013).

## குருவும் சீடனும்

மகாகவி பாரதியார் புதுவையில் வாழ்ந்திருந்த நேரத்தில் இராஜாராமையன் என்ற நாகைப்பார்ப்பான் வீட்டில் அவருடைய தந்தையார் தமிழில் மொழிபெயர்த்து எழுதி வைத்திருந்த உபநிடதத்தைத் திருத்தி எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது குள்ளச்சாமி என்கிற குருவைக் கண்டார். தோற்றத்தால் குள்ளச்சாமி பித்தனைப் போல இருந்து கொண்டு நாய்களோடு விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டார். “உண்மை ஞானியின் கண்களுக்கு உண்மை ஞானி வெளிப்படுவார்” என்ற நியதியின் அடிப்படையில் பாரதியாரின் கண்களுக்குக் குள்ளச்சாமி குருவாகக் காட்சியளித்தார். ஆனால் புதுவை நகர்வாழ்ப் பொதுமக்களுக்கு அவர் பித்தராய்க் காட்சியளித்தார். பொதுமக்களிலும் சிலர் குள்ளச்சாமியின் செயல்பாடுகளைக் கொண்டு இவர் அட்டாங்க யோகக்கலையில் வல்லவரோ என்று நினைத்தனர். பாரதியார் குள்ளச்சாமியார் குறித்து மக்களிடம் விசாரிக்கும்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய்ப் பதிலளித்தனர். பாரதியார் குள்ளச்சாமியிடமே அவர் குறித்துக் கேட்டுத்தெரிந்து கொள்ளவேண்டும் என்ற முடிவில் தெருவில் வந்த குள்ளச்சாமியின் கைகளை அன்புடனே இறுகப் பற்றிக் கொண்டு பேசுகின்றார்.

“அப்பனே! தேசிகனே! ஞானி என்பார்

அவனியிலே சிலர்நின்னைப் பித்தன் என்பார்

செப்புறுநல் லஷ்டாங்க யோக சித்தி

சேர்ந்தவனென் றுனைப்புகழ்வார் சிலரென் முன்னே

ஒப்பனைகள் காட்டாமல் உண்மை சொல்வாய்,

உத்தமனே! எனக்குநினை உணர்த்து வாயே”

என்று பாரதி கேட்க அதற்குக் குள்ளச்சாமி பதிலொன்றும் கூறாமல் பாரதியைப் பார்க்கின்றார் (Gurusamy, 2013). எனவே பாரதியார் மேலும் குள்ளச்சாமியிடம்,

"யாவன்நீ? நினக்குள்ள திறமை யென்னே?

யாதுணர்வாய்? கந்தைசுற்றித் திரிவ தென்னே?

தேவனைப்போல் விழிப்ப தென்னே? சிறியாரோடும்

தெருவிலே நாய்களொடும் விளையாட் டென்னே?

பாவனையிற் புத்தரைப்போல் அலைவ தென்னே?

பரமசிவன் போலுருவம் படைத்த தென்னே?

ஆவலற்று நின்றதென்னே? அறிந்த தெல்லாம்,

ஆரியனே, எனக்குணர்த்த வேண்டும்"

என்று கேட்க அதற்கும் குள்ளச்சாமி எவ்விதப் பதிலும் அளிக்காமல் தன்னைப் பற்றியிருந்த பாரதியின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு செல்லப் பார்க்கின்றார் (Gurusamy, 2013).

## குருவின் சோதனை

மெய்யியலைத் தேடிச் செல்லுபவரின் கண்களுக்குக் குரு தெரிவதே மிகப்பெரிய விடயம். உள்ளத்தில் உண்மையான ஞானத்தேடல் இருப்பவரின் கண்களுக்கே குரு தெரிவார். அவ்வாறு கண்களுக்கு அகப்பட்ட அக்குருவிடம் சென்று ஞானத்தைப் பெறலாம் என்று முயற்சிக்கின்றபோது உண்மைக் குருவானவர் சீடனைப் பல நிலைகளில் சோதிப்பார். அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்கிற ஏற்றுக்கொள்கிற பக்குவ நிலை சீடனுக்கு இருக்கின்றதா என்று பார்த்த பின்னரே குரு சீடனுக்கு உபதேசம் செய்வார். அத்தகு நிலையிலேயே குள்ளச்சாமி பாரதியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு செல்லப் பார்த்தார்.

"பற்றியகை திருகியந்தக் குள்ளச் சாமி

பரிந்தோடப் பார்த்தான் யான் விடவே யில்லை"

குருவைக் கண்ட சீடன் அவனுடைய திருவடியை விடாமல் பற்றிக் கொள்ளவேண்டும். அவனுடைய கவனம் முழுவதும் குருவிடமிருந்து ஞானம் பெறுவதில் மட்டும் இருக்க வேண்டும். இத்தகு பக்குவ நிலை பாரதிக்கு இருக்கிறதா என்பதைச் சோதித்துப் பார்க்க குள்ளச்சாமி, தன்னுடைய கைகளைப் பற்றியிருந்த பாரதியை நோக்கிப் புன்முறுவல் பூத்தார். பாரதியார் அதைக் கண்டு குள்ளச்சாமி தன்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டார் போலும் என்றெண்ணித் தாம் பற்றியிருந்த கைகளை இலேசாக விடுத்துக் குருவின் திருவடியைப் பார்த்தார். குருவின் திருவடியே உய்வுக்கு வழிகாட்டுவதாகும். திருவடியைச் சரண் அடைதலே சீடனின் பரிபக்குவ நிலையாகும் (Gurusamy, 2013).

"திருவடி யேசிவ மாவது தேரில்

திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்

திருவடி யேசெல் கதியது செப்பில்

திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே"

என்று திருமந்திரமும் திருவடியே சிவலோகத்துக்குச் செல்லும் நெறியாகவும் சிவமாகவும் புகலிடமாகவும் உள்ளது என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. இந்தத் தெளிவுடைய பாரதியார் குருவின் திருவடியைப் பார்க்கின்றார். ஆனால் குருவாகிய குள்ளச்சாமி சீடனைச் சோதிக்கும் விதமாக, இதுதான் சமயம் என்றெண்ணி பாரதியிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு குதித்தோடினார். ஆனாலும் 'பரிசுத்த ஆன்மா பதியின் பின்னரே செல்லும்' என்பதைப் போலவும் 'தாய்ப்பசுவின் பின்னாடியே கன்று

பாய்ந்தோடிச் செல்லும்' என்பதைப் போலவும் பாரதியார் குள்ளச்சாமியின் பின் ஓடிச்சென்று அவரை வழி மறித்துக் கொண்டார் (Varatharasan, 2016).

"சுற்றுமுற்றும் பார்த்துப்பின் முறுவல் பூத்தான்

தூயதிருக் கமலபதத் துணையைப் பார்த்தேன்!

குற்றமற்ற தேசிகனும் திமிறிக் கொண்டு

குதித்தோடி அவ்வீட்டுக் கொல்லை சேர்ந்தான்

மற்றவன்பின் யானோடி விரைந்து சென்று

வானவனைக் கொல்லையிலே மறித்துக் கொண்டேன்"

குருவை விடாது பற்றிக் கொண்டிருக்கும் சீடனுக்குக் குரு அருள் புரிவார். குருவின் திருமேனியைப் பார்த்துக் கொண்டே இருப்பதும் அவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கொண்டே இருப்பதும் அவருடைய வார்த்தைகளைச் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டே இருப்பதும் அவருடை திருவுருவைச் சிந்தித்துக் கொண்டே இருப்பதும்தான் முக்திக்கு வழிகாட்டும் என்று திருமந்திரம் பகர்கிறது (Gurusamy, 2013).

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே"

இதை உணர்ந்த பாரதியார் குருவாகிய குள்ளச்சாமியை விட்டுவிடக் கூடாது என்றெண்ணி அவர் பின்னால் ஓடிச்சென்று வழிமறித்துத் தனக்கு ஞானம் வழங்க வேண்டுமென்று இறைஞ்சி நிற்க குருவாகிய குள்ளச்சாமி பாரதியின் பக்குவ நிலையையும் ஞானம் அடைய வேண்டுமென்ற உள்ள உறுதியையும் கண்டு தம்முடைய கண்களாலே ஞான உபதேசம் செய்கிறார் (Varatharasan, 2016).

## குருஉபதேசம்

"பக்கத்து வீடிடிந்து சுவர்கள் வீழ்ந்த

பாழ்மனையொன் றிருந்ததங்கேபரமயோகி

ஒக்கத்தன் அருள்விழியால் என்னை நோக்கி

ஒருகுட்டிச் சுவர்காட்டிப் பரிதி காட்டி,

அக்கணமே கிணற்றுளேதன் விம்பங் காட்டி,

"அறிதிகொலோ?" எனக்கேட்டான் "அறிந்தேன்" என்றேன்

மிக்கமகிழ் கொண்டவனும் சென்றான் யானும்

வேதாந்த மரத்திலொரு வேரைக் கண்டேன்"

என்று தனக்குக் குரு ஞானஉபதேசம் செய்த காட்சியைக் கூறுகிறார். பாரதியின் ஞானநிலைக்குக் குருவின் நயன உபதேசம் நன்றாகப் புரிந்தது (Gurusamy, 2013).

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்

நந்திகள் நால்வர்

சிவபெருமானிடம் உபதேசம் பெற்ற குருநாதர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வர் என்று திருமந்திரம் கூறுகிறது. இவர்களைச் சனகாதி முனிவர்கள் என்று அழைப்பர்.

இந்நால்வரும் தட்சணாமூர்த்தியாகிய குருவிடம் உபதேசம் பெறச் சென்றபோது குரு இந்நால்வருக்கும் சின்முத்திரையைக் காட்டி மௌன உபதேசம் செய்தார். இந்நால்வரும் அம்மௌன உபதேசத்தின் வாயிலாகவே அனைத்தையும் கற்று ஞானம் பெற்றனர் என்பதைப் புராணங்கள் கூறுகின்றன. இவர்களின் ஞான வரலாற்றில் குருவும் பேசவில்லை சீடர்களும் பேசவில்லை. ஆனால் குரு உபதேசம் செய்துவிட்டார். சீடர்களும் கற்றுக் கொண்டனர். இத்தகு நிலையையே பாரதியிடமும் காணமுடிகிறது. நயனத்தின் மூலமாகவே குட்டிச்சுவரையும், சூரியனையும், கிணற்றினுள் அதன் உருவத்தையும் காட்டி "அறிந்து கொண்டாயா?" என்று மட்டும் குருவாகிய குள்ளச்சாமி கேட்க, பாரதியார் "அறிந்து கொண்டேன்" என்று பதில் அளித்தார். இவ்விருவருக்கும் நடந்த 'பரிபாஷை' பக்குவமற்ற ஆன்மாக்களாகிய நமக்குப் புரியாது என்பதை நன்றாகப் புரிந்து கொண்ட பாரதி நாமும் ஞானமடைய வேண்டும் என்ற உயரிய நோக்கை மனதில் வைத்துச் "செந்தமிழால் இதை விளக்கமாகக் கூறுகிறேன்" என்று தாம் பெற்ற ஞானத்தைப் பின்வருமாறு விளக்குகிறார் (Varatharasan, 2016).

## பாரதியாகிய குரு சீடர்களாகிய நமக்கு அளிக்கும் உபதேசம்

தேசிகன்கை காட்டியெனக் குரைத்த செய்தி

செந்தமிழில் உலகத்தார்க் குணர்த்து கின்றேன்

"வாசியைநீ கும்பத்தால் வலியக் கட்டி,

மண்போலே சுவர்போலே வாழ்தல் வேண்டும்

தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே

தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்

பேசுவதில் பயனில்லை, அனுப வத்தால்

பேரின்பம் எய்துவதே ஞானம்"

என்றான் (Gurusamy, 2013). மனிதனின் உயிருக்கு அடிப்படையானது பிராணவாயு எனப்படும் காற்றாகும். இக்காற்றை எந்த அளவிற்கு மிகச்சரியாகப் பயன்படுத்துகின்றனரோ அந்த அளவிற்கு உயிர் வளமும் உடல்வளமும் ஞான வளமும் ஏற்படும். எனவேதான் சித்தர்கள் வாசியோகம் எனப்படும் காற்றுக்கலையில் சிறந்தவர்களாக இருந்து தம்முடைய சீடர்களுக்கும் கற்றுத் தந்தனர். காற்றை எவ்வாறு நாசியில் ஏற்றுவது? எவ்வாறு நிறுத்தி வைப்பது? எவ்வாறு இறக்குவது? என்பதற்கு ஒரு கணக்கு இருக்கிறது. இக்கணக்கை அறிந்தவர்கள், அதை முறையாகப் பயிற்சி செய்தவர்கள் எமனை வெற்றி கொள்வர் என்று திருமந்திரம் கூறுகிறது.

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை

காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்

கூற்றை யுதைக்குங் குறியது வாமே"

பிராணாயாமம் என்று கூறப்படும் சுவாசித்தல் பயிற்சியைப் பல்வேறு சித்தர்கள் வலியுறுத்திச் செல்கின்றனர். அவர்களில் அகத்தியர், திருமூலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் முதலோனோர் குறிப்பிடத்தக்கவர்கள். பூரகம், கும்பகம், ரேசகம் என்று மூன்று நிலைகளில் சுவாசித்தல் பயிற்சி மேற்கொள்ளல் வேண்டும். காற்றைப் பதினாறு மாத்திரை அளவு இடப்பக்க மூக்கு வழியாக மூச்சை உள்ளே இழுப்பது பூரகம் என்றும் இழுத்த மூச்சுக் காற்றை அறுபத்து நான்கு மாத்திரை அளவு உள்ளே நிறுத்தி வைப்பது கும்பகம் என்றும் வலப்பக்க மூக்கு வழியாக முப்பத்திரண்டு மாத்திரை அளவில் மூச்சை வெளியிடுவது ரேசகம் என்றும் திருமந்திரம் கூறுகிறது (Varatharasan, 2016).

"வாமத்தில் ஈரெட்டு மாத்திரை பூரித்தே

ஏமுற்ற முப்பத் திரண்டும் இரேசித்துக்

காமுற்ற பிங்கலைக் கண்ணாக இவ்விரண்

டோமத்தால் எட்டெட்டுக் கும்பிக்க உண்மையே”

மகாகவி பாரதியார் இத்தகைய நிலைகளைத் தெளிவாக அறிந்துணர்ந்தவராதலால் குருவாகிய குள்ளச்சாமியின் பரிபாஷையை உடனே புரிந்து கொண்டார். விரிவாகப் ‘பேசுவதில் பயனில்லை, அனுபவத்தால் பேரின்பம் எய்துவதே ஞானம்’ என்று கூறுகின்றார் (Varatharasan, 2016). வாசியோகத்தைச் சொல்லால் விளக்கிக் கொண்டே சென்றால் அதனால் எப்பயனும் இல்லை. அனுபவம் மூலமாகவே உணர முடியும் என்று நமக்குக் குருவாக இருந்து பாரதியார் கூறுகின்றார் (Gurusamy, 2013).

## குருவுக்கும் சீடனுக்கும் உள்ள தொடர்ச்சியான உறவுநிலை

குருவாகிய குள்ளச்சாமி தனக்கு உபதேசித்தது பற்பல என்று கூறுகின்றார். எல்லாமே பரிபாஷையால் குருவுக்கும் சீடனுக்கும் மொழிமாற்றம் நடந்துள்ளன.

“ஐயனெனக் குணர்த்தியன பலவா ஞானம்

அதற்கவன் காட்டிய குறிப்போ அநந்த மாகும்”

என்று குருவாகிய குள்ளச்சாமிக்கும் சீடனாகிய தனக்கும் இடையே நடந்ததைப் பாரதியார் கூறுகிறார் (Gurusamy, 2013). மற்றொருநாளில் குருவாகிய குள்ளச்சாமி தன்னுடைய சீடனின் உள்ளம் பாரமற்று இருக்க வேண்டும் என்பதை அறிவுறுத்த வேண்டும் என்பதற்காக அழுக்குமூட்டையைத் தூக்கிக் கொண்டு பாரதி முன் வருகிறார். அதைக்கண்டவுடன் பாரதி சற்றே நகை புரிந்து, “குருவே இது என்ன அழுக்கு மூட்டை? பித்தருடைய செய்கை போல உங்களுடைய செய்கை இருக்கிறதே? ஏன் இந்தக் கோலம் என்று கேட்டவுடன் “வெளியில் நான் சுமக்கிறேன். அகத்தில் நீ சுமக்கிறாய்” என்று பதில் அளிக்கின்றார்.

“மற்றொருநாள் பழங்கந்தை யழுக்கு மூட்டை

வளமுறவே கட்டியவன் முதுகின் மீது

கற்றவர்கள் பணிந்தேத்தும் கமல பாதக்

கருணைமுனி சுமந்துகொண்டேன் னெதிரே வந்தான்

சற்றுநகை புரிந்தவன்பால் கேட்க லானேன்

தம்பிரானே! இந்தத் தகைமை என்னே?

முற்றுமிது பித்தருடைச் செய்கை யன்றோ?

மூட்டைசுமந் திடுவதென்னே? மொழிவாய்” என்றேன்

“புன்னகைபூத் தாரியனும் புகலு கின்றான்

“புறத்தேநான் சுமக்கின்றேன் அகத்தி னுள்ளே,

இன்னதொரு பழங்குப்பை சுமக்கி றாய்நீ”

என்றுரைத்து விரைந்தவனும் ஏகி விட்டான்.

மன்னவன்சொற் பொருளினையான் கண்டுகொண்டேன்”

தன்னுடைய சீடன் அவனுடைய உள்ளத்தில் மலமற்றுத் தூய்மையாக விளங்க வேண்டும் என்பதற்காக குரு வெவ்வேறு செய்கைகளின் மூலம் சீடனை நல்வழிப்படுத்துவார். அத்தகு நிலையிலேயே குருவாகிய குள்ளச்சாமி சீடனாகிய பாரதியாருக்கு நல்வழிப்படுத்தினார். உண்மை

ஞானத் தேடல் இருப்பவருக்கு உண்மை குரு கண்ணில் தெரிவார். ஞானத்தேடல் பாரதியைப்போல் முழுமையாக உண்மையாக இருக்க வேண்டும் (Gurusamy, 2013).

“நினைக்கின் நினைக்கும் நினைப்பவர் தம்மைச்

சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்

தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும்

கனத்த மனத்தடைந் தார்உயர்ந் தாரே”

குருவாகிய சிவபெருமான், தன்னை நினைத்தால், நினைப்பவரைத் தானும் நினைப்பான். (நினைத்து, அவரை மேன்மேல் உயரச் செய்வான்) அதனால், சுனைக்குள்ளே மலர்ந்த ஒரு தாமரை மலரின்மேல் எழுகின்ற சோதிபோல இருதய கமலத்திலே ஒளிவடிவாய் விளங்கும் அப்பெருமானை `அடைதல்` என்பது மனத்தால் அடைதலேயாதலின் அவ்வாறு அவனை முதிர்ந்த அன்பால் அடைந்தவர், உலகியலில் எத்துணைச் சிறுமையராய் இருப்பினும், உயர்ந்தோரினும் உயர்ந்தோரேயாவர் என்று திருமந்திரம் ஞானகுரு தரிசனப்பகுதியுள் தெளிவாக விளக்குகிறது. எனவே குருவை இடையறாது நினைத்தலே சீடனின் முதல் கடமையாகும். உண்மை ஞானத்தேடலிலிருந்து குருவை நினைத்துக் கொண்டிருந்தால் பாரதிக்குக் குள்ளச்சாமி தோன்றியதைப் போல் ஒவ்வொருவருக்கும் சீடருக்கும் குரு தோன்றுவார் (Varatharasan, 2016).

## முடிவுரை

உலகியல் கல்விக்கும் மெய்யியல் கல்விக்கும் சீடனுக்கு அடிப்படையாக உறுதுணையாகத் திகழ்பவர் குரு ஆவார். உண்மைத் தேடல் உள்ளவர்களுக்குக் குரு தானாகவே முன்தோன்றி சீடனின் தன்மைக்கேற்ப ஞானம் அளிப்பார். பக்குவப்பட்ட சீடன் குருவின் பரிபாஷையை விரைந்து புரிந்து கொள்வான். குருவாகிய குள்ளச்சாமி சீடனாகிய பாரதிக்கு நயனதீட்சை அளித்துத் தம்முடைய நயனத்தாலேயே மண்சுவரையும் பரிதியையும் கிணற்றினுள் பரிதியின் பிம்பத்தையும் காட்டி உபதேசிக்கிறார். பக்குவப்பட்ட ஆன்மாவாகிய பாரதியார் குருவின் நயனதீட்சையை ஏற்று அவருடைய பரிபாஷையையும் புரிந்து கொள்கின்றார். இந்த மானுட உலகம் பயன்பெற வேண்டும் என்பதற்காகத் தான் பெற்ற அனுபவத்தைப் பாரதியார் செந்தமிழில் எல்லோருக்கும் சொல்லிச் சென்றுள்ளார். பாரதி காட்டிய வழிநின்று அனைவரும் உய்தி பெற முயற்சிப்போம்.

## References

Gurusamy, M.R.P. (2013) Bharathi padalkal aaivu pathippu, Manivasagar Pathippagam, Chennai, India.

Varatharasan, G. (2016) Thirumoolar Thirumanthiram. Palaniyappa Brothers, Chennai, India.

Varatharasan, M. (2014) Thirukkural, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License